819

819/2.24

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.





தூத்துக்குடி,

# ஸ்ரீ சேந்தன் தியான சபை.

வெளியீடு.

## 1. விநாயகர் அகவல்.
## 2. கந்தர் கலிவெண்பா.

தூத்துக்குடி,
அருணோதயம் பிரிண்டிங் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.

1924 [அணா 1.

Q2:417
N24.
18005

சிவமயம்
திருச்சிற்றம்பலம்.

# புறனடை.

## விநாயகரகவல் வரலாறு

சுந்தரமூர்த்தி நாயனருடனே கைலாயத்துக்குப் பரம சிவனுடைய சந்நிதானத்தில் ஆதியுலா அரங்கேற்ற எழுந் தருளிய சேரமான் பெருமாள் நாயனர் ஔவையாரை அழையாமல் வந்து விட்டோமே யென்று நினைத்தார். அது விநாயகரைப் பூசித்துக் கொண்டிருந்த ஔவைப் பிராட்டியாருக்குத் தெரிந்து தாமும் அவர்களுடனே கைலா யத்துக்குப் போகவேண்டு மென்கிற விருப்பங்கொண்டு விரைவாகப் பூசை செய்தார். விநாயகர் 'ஔவையே! நீ விரையாது பூசைசெய்; அவர்களுக்கு முன்னதாகவே உன் னைக் கைலையிற் சேர்ப்பேன்' என்றார். அப்படியே ஔவை யார் விரையாது பூசைசெய்து இந்த அகவலைத் தோத்திரமா கப் பாடினார். அப்பால் விநாயகர் தாம்சொன்னபடி ஔவை யாரைக் கைலாயத்திற் சேர்த்தனர்.

### விநாயகரகவல்

க சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலவிசை பாடப்
பொன்னரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்

௨ பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

௩ நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்

௪ சொற்பதங் கடந்ததூய மெஞ்ஞான
அற்புதம் நின்ற கற்பகக் களிறே!
முப்பழ நுகரும் மூடிக வாகன!
இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்

௫ தாயாய் எனக்குத் தானெழுந் தருளி,
மாயாப் பிறவி மயக்க மறுத்துத்,
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,

௬ குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திரமிது பொருளென
வாடா வகைதான மகிழ்ந்தெனக் கருளிக்,
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே,

௭ உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்,

௮ கருவிகள் ஒடுங்குங் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து,
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி,
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே,

௯ ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி.
ஆறா தாரத் தங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே

௰ இடையிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி,
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பினுவில் உணர்த்திக்,

௰௧ குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலாதாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே,

௰௨ அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி,
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,

௰௩ சண்முக தூலமுஞ் சதுர்முக சூக்கமும்
எண்முகம் ஆக இனிதெனக் கருளிப்,
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்திக்,

௬௪ கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக்கருளி
என்னை அறிவித்தெனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக்களைந்து

௬௫ வாக்கும் மனமும் இல்லா மனோலயந்
தேக்கியே என்தன் சிந்தை தெளிவித்து,
இருள்வெளி யிரண்டுக் கொன்றிடம் என்ன
அருள்தரு மானந்தத் தழுத்தியென் செவியில்

௬௬ எல்லையில்லா ஆனந் தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்,
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்,
சித்தத்தி னுள்ளே சிவலிங்கங் காட்டி,

௬௭ அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

௬௮ அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்,
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக! விரைகழல் சரணே.

## விநாயகரகவல்

முற்றிற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

---

## கந்தர் கலிவெண்பா வரலாறு.

---

செந்தமிழ்ப் பாண்டித்திருநாட்டிலே, தாமிரவருணி யாற்றின் வடகரையிலிருக்கிற ஸ்ரீ வைகுண்டமென்று வழங்கிவருங் கைலாசபுரத்திலே, இற்றைக்குச் சற்றேறக் குறைய முந்நூற்றுமுப்பது ஆண்டுகளுக்குமுன்னே, வேளாளர் குலத்திற் பிறந்த குமர குருபர சுவாமிகள் ஐந்து வயதுவரையும் ஊமையாயிருந்து, ஐந்தாம் வயதிலே திருச்செந்தூர் முருகக்கடவுளது திருவருளினாலே தமிழ்ச் செய்யுள்பாடுந் திறமை யுண்டாகப்பெற்று, கந்தர் கலி வெண்பா என்னும் இந்நூலை அருளிச் செய்தார். கல்வியில் விருப்பமுடையவர்கள் இக் கலிவெண்பாவை உளங்குவிந்து அன்புடன் தினந்தோறும் பாராயணம் செய்துவரின் தம் விருப்பம் நிறைவேறப் பெறுவதோடு முருகப் பெருமான் திருவருட்குப் பாத்திரராவாரென்பது திண்ணம்.

---

### குமர குருபர சுவாமிகள் அருளிச்செய்த

### திருச்செந்தூர்க்

# கந்தர்கலி வெண்பா.

---

க பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையுந்—தேமேவு

உ நாதமும் நாதாந்த முடிவும் நவைதீர்ந்த
போதமுங்காணாத போதமாய்—ஆதிநடு

ங அந்தங் கடந்தநித்தி யானந்தபோதமாய்ப்
பந்தந் தணந்த பரஞ்சுடராய்—வந்த

ச குறியுங் குணமுமொரு கோலமுமற் றெங்குஞ்
செறியும் பரம சிவமாய்—அறிவுக்கு

ரு அநாதியாய் ஐந்தொழிற்கும் அப்புறமா யன்றெ
மநாதிகளுக் கெட்டா வடிவாய்த்—தனாதருளின்

சு பஞ்சவித ரூப பாசகமாய் எவ்வுயிர்க்குந்
தஞ்சமென நிற்குந் தனிப்பொருளாய்—எஞ்சாத

எ பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்புணர்வுங்
காரணமு மில்லாக் கதியாகித்—தாரணியில்

அ இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்குந்
தந்திரத்திற் சாராது சார்வதுபோன்—முந்துங்

கூ கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்ற உருவாய்த்—திரிகரண

க0 மாகவரும் இச்சை அறிவியற்ற லாவிலய
போக அதிகாரப் பொருளாகி—ஏகத்து

கக உருவும் அருவும் உருவருவும் ஆகிப்
பருவ வடிவம்பலவாய்—இருண்மலத்துள்

கஉ *மோகமுறும் பல்லுயிர்க்கு முத்தியளித் தற்குமல
பாகமுற வேகடைக்கண் பாலித்துத்—தேகமுறத்

* மோகமுறும் பல்லுயிர்-சகலர்; ஆணவம் மாயை கன்மம் என்னும் மும்மலங்களுமுடையோர்.

௧௩ தந்த அருவுருவஞ் சார்ந்தவிந்து மோகினிமான்
பெந்த முறவே பிணிப்பித்து—மந்த்ரமுதல்

௧௪ ஆறத்து வாவுமண்டத் தார்ந்த ‡அத்து வாக்களுமுற்
கூறத் தகுஞ்சிமிழ்ப்பிற் கூட்டுவித்து—மாறிவரும்

௧௫ ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா
னூரவந்த நான்குநூ றாயிரத்துள்— தீர்வரிய

௧௬ கன்மத்துக்கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் துழலத் திரோதித்து—வெங்கிரய

௧௭ சொர்க்காதி போகமெல்லாந் துய்ப்பித்துப் பக்குவத்
தற்கா ரணஞ்சிறிது நண்ணுதலுந்—தர்க்கமிடுந் [தால

௧௮ தொன்னூற் பரசமயந் தோறும் அதுவதுவே
நன்னூல் எனத்தெரிந்து நாட்டுவித்து— முன்னூல்

௧௯ விரதமுத லாயபல மெய்த் தவத்தின் உண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்து—அருள்பெருகு

௨0 சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்து
ஆலோகந் தன்னை அகற்றுவித்து—நால்வகைபாம்

௨௧ *சத்திநி பாதந் தருதற்கு இருவினையும்
ஒத்துவருங் காலம் உளவாகிப்—பெத்த

௨௨ மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி—உலவாது

௨௩ அறிவுக் கறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்—பிறியாக்

---

‡ அத்துவா—வழி. *சத்தி நிபாதம்—சிற்சத்தி பதித்தல்.

௨௪ கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென்றோர் திருப்பேர்கொண்டு- திருநோக்கால்

௨௫ ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழும் அத்துவாக்கள் இருமூன்றும்—பாழாக

௨௬ ஆணவமான படலங் கிழித் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டிப்—பூணும்

௨௭ அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங்காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி—முடியாது

௨௮ தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகியெங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்---போக்கும்

௨௯ வரவும் நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா இன்பம்—மருவுவித்துக்

௩0 *கன்மமலத்தார்க்குமலர்க் கண்மூன்றுந் தாழ்சடையும்
வண்மழுவுமானுமுடன்மால்விடைமேன்மின்னிடத்துப்

௩௧ பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில்
வாய்த்ததனைய தெய்வ வடியாகி—மூத்த

௩௨ கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள்செய் தண்ணளின்
*ஒருமலத்தார்க் கின்பம் உதவிப்—பெருகியெழு

௩௩ மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேயிருத்தி
ஆன்றபர முத்தி அடைவித்துத்—தோன்றவரும்

---

*கன்மமலத்தார— பிரளயாகலர்; ஆணவம் கன்மம் என்னும் இருமலமுடையோர்.

*ஒருமலத்தார்— விஞ்ஞானகலர்; ஆணவமலம் ஒன்றுமே உடையோர்.

௩௪ யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்தம் முடியாக—ஞானம்

௩௫ திருவுருவா விச்சை செயலறிவு கண்ணா
அருளதுவே செங்கை அலரா—இருநிலமே

௩௬ சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே! எவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே!—மின்னுருவந்

௩௭ தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியாற் செய்தபைம்பொன்
வாய்ந்த கிரண மணிமுடியும்—தேய்ந்தபிறைத்

௩௮ துண்டமிரு மூன்றுநிரை தோன்றப் பதித்தனைய
புண்டாம் பூத்தநுதற் பொட்டழகும்—விண்ட

௩௯ பருமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியுங் கண்மலர் ஈராறும்—பரிதி

௪0 பலவும் எழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்—நிலவுமிழும்

௪௧ புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயும்
சென்மவிடாய் தீர்க்குந்திருமொழியும்-விண்மலிதோள்

௪௨ வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூரனைத்தடிந்து
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்—எவ்வுயிர்க்கும்

௪௩ ஊழ்வினையை மாற்றி உலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்—சூழ்வோர்

௪௪ வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்—விடுத்தகலாப்

௪௫ பாச இருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்—நேசமுடன்

சசு போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கும்
மோகமளிக்கும் முகமதியுந்—தாகமுடன்

சஎ வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையுங்--கொந்தவிழ்ந்த

சஅ வேரிக் கடம்பும் *விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் *புயசைலம் பன்னிரண்டும்—ஆரமுதந்

சகூ தேவர்க் குதவுந் திருக்கரமும் சூர்மகளிர்
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்—ஓவாது

ருo மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேரவணிந்த திருக்கரமும்—மார்பகத்தில்

ருக வைத்த கரதலமும் வாம்மருங் கிற்கரமும்—
உய்த்த குறங்கில் ஒருகரமும்—மொய்த்த

ருஉ சிறுதுடிசேர் கையுமமணி சேர்ந்ததடங்கையும்
கறுவுசம ரங்குஞ்சேர் கையும்—தெறுபோர்

ருங அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத்தலமும்
கதிர்வாள் விதிர்க்குங கரமும்—முதிராத [ந்த

ருச குும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்டணை
அம்பொன் மணிப்பூண் அகன்மார்பும்—பைம்பொற்

ருரு புரிநூலும் கண்டிகையும் பூம்பட்டுடையும்
அரைஞாணும் கச்சையழகுந்—திருவரையும்

ருசு நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்—சோதி

---

*விரை-வாசனை-குரவு—முல்லை *புயசைலம்—புயமலை

ருஎ இராப்பரிசி நூறா யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்—உளந்தனிற்கண்(டு)

ருஅ ஆதரிப்போர்க்கு* ஆருயிரால் அன்பாகத்தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே!—ஓதியவைந்(து)

ருகூ ஓங்காரத் துள்ளொளிக்கும் உள்ளொளியாய் ஐந்தொ
நீங்காத பேருருவாய் நின்றோனே!—தாங்கரிய[ழிற்கு

சூ0 மந்திரமே சோரியா, வான்பதமே மாமுடியாத்,
தொந்தமுறும் வன்னமே தோக்காகப்—பந்தனையால்

சூக ஒத்த புவனத் துருவே! உரோமமாத்,
தத்துவங்களே சத்த தாதுவா—வைத்த

சூஉ கலையே அவயவமாக் காட்டும் அத்துவாவின்
நிலையே வடிவமா நின்றோய்!—பலகோடி

சூங அண்டம் உருவாகி அங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுங் காரணமாய்த்—தொண்டுபடும்

சூச ஆவிப்புலனுக் கறிவளிப்ப ஐந்தொழிலும்
ஏவித் தனிநடத்தும் எங்கோவே!—மேவ

சூரு வரும் அட்ட மூர்த்தமாம் வாழ்மெய்ஞ் ஞானந்
தரும் அட்ட யோகத் தவமே!—பருவத்(து)

சூசூ அகலாத பேரன் படைந்தோர் அகத்துட்
புகலாகும் இன்பப் பொருப்பும்—சுகலளிதப்

சூஎ பேரின்ப வெள்ளப் பெருக்காறும் மீதானந்
தேரின்ப நல்குந் திருநாடும்—பாரின்பம்

சூஅ எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவரவு
அல்லாதுயர்ந்த அணிநகரும்—தொல்லுலகில்

92:417 N24

---

* ஆதரிப்போர்—அன்புசெய்வோர்.

௬௯ ஈறும்முதலும் அகன்றெங்கு நிறைந்ததெழுத்தைக்
கூறி நடாத்துங் குருகதமும் ஏறுமதந்

௭௦ தோய்ந்து களித்தோர் துதிக்கையினாற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்—வாய்ந்தசிவ

௭௧ பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையுங்—காரணத்துள்

௭௨ ஐந்தொழிலும் ஓவாது அளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசுஞ்—சந்ததமும்

௭௩ நீக்கமின்றியாடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளும் ஆணையும்—தேக்கமழ்ந்து

௭௪ வீசும் பனுவல் விபுதர் தனிததனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே!—தேசுதிகழ்

௭௫ பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையும் முக்கட் பரஞ்சோதி— ஆங்கொருநாள்

௭௬ வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
*ஐந்து முகத்தோடு அதோமுகமுந்—தந்து

௭௭ திருமுகங்கள் ஆறாகிச் செந்தழற்கண் ஆறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப—விரிபுவனம்

௭௮ எங்கும் பரக்க இமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தால்— அங்கம்

---

* ஐந்து முகம்—ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம்.

எசு. எடுத்தமைத்து வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப மெல்லக் கொடுபோய்-அடுத்ததொரு

அ0. பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்-போதொருசற்(று)

அக. அன்னவளுங்கொண் டமைதற் காற்றாள் *சரவணத்திற்
சென்னியிற்கொண்டுய்ப்ப திருவுருவாய்—முன்னர்

அஉ. அறுமீன் முலையுண்டு அமுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த—நாதன் குறுமுறுவற்

அங. கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலருக்காட்டுதலும்
அன்னவள்கண் டவ்வுருவம் ஆறினையுந்-தன்னிரண்டு

அச. கையால் எடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்து
மெய்யாறும் ஒன்றாக மேவுவித்துச்—செய்ய

அரு. முகத்தில் அணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துண் மகிழ்பூத் தளித்துச்—சகத்தளந்த

அசு. வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்(து)
உள்ள முவப்ப உயர்ந்தோனே!—கிள்ளைமொழி

அஎ. மங்கை சிலம்பின் மணியொன் பதில்தோன்றுந்
துங்கமடவார் துயர்தீர்ந்து—தங்கள்

அஅ. விருப்பால் அளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந்தார்வீர வாகு—நெருப்பிலுதித்(து)

அகூ. அங்கட் புவனம் அனைத்தும் அழித்துலவுஞ்
செங்கட் கடாதவனைச் சென்று கொணர்ந்-தெங்கோன்

---

* சரவணம்—நாணல்.

௯௦. விடுக்குதியென் றுய்ப்பவதன் மீதிவர்ந்தெண் டிக்கும்
நடத்தி விளையாடும் நாதா!—படைப்போன்.

௯௧. அகந்தை உரைப்பமறை ஆதி எழுத்தொன்(று)
உகந்த பிரணவத்தின் உண்மை—புகன்றிலையால்

௯௨. *சிட்டித்தொழிலதனைச் செய்வதெங்ஙனென்றுமுனங்
குட்டிச் சிறையிருத்துங் கோமானே!—மட்டவிழும்

௯௩. பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசைப்ப
முன்னம் பிரம மொழிந்தோனே!—கொன்னெடுவேல்

௯௪. தாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே!—சீரலைவாய்த்

௯௫. தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கருணை
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து—வெள்ளைக்

௯௬. கயேந்திரனுக்(கு) அஞ்சல் அளித்துக் கடல்சூழ்ந்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்—சயேந்திர

௯௭. சூரனைச்சோ தித்துவரு கென்றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே!—காரவுணன்

௯௮. வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையுஞ் சங்கரித்துப்—பானு

௯௯. பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்!—சகமுடுத்த

௧௦௦. வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்!—போரவுணன்

---

*சிட்டி - சிருட்டி - படைப்பு.

௧௦௧. அங்கமிரு கூறாய் அடன்மயிலுஞ் சேவலுமாய்த்(துள்
துங்கமுட னார்த்தெழுந்து தோன்றுதலு மங்கவற்

௧௦௨. சீறும்அர வைப்பொருத சித்ரமயில் வாகனமா
ஏறி நடாத்தும இளையோனே!—மாறிவரு

௧௦௩. சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே!—மூவர்

௧௦௪. குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தேவர்(வாஞ்
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே!—மறைமுடி

௧௦௫. சைவக் கொழுந்தே! தவக்கடலே! வானுதவுந்
*தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே!-பொய்விரவு

௧௦௬. காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்—பூமருவு

௧௦௭. கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத் தினிதிருந்து—மேன்மைபெறத்

௧௦௮. தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே!—உள்ளமுவந்(து)

௧௦௯. * ஆறு திருப்பதிகண் டாறெழுத்தும் அன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே!--நாறுமலர்க்

௧௧௦. கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே!—சந்ததமும்

௧௧௧. பல்கோடி சன்மப்பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்—பல்கோடி

---

* தெய்வக்களிறு—தெய்வயானை. * ஆறுதிருப்பதி- திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், பழமுதிர்சோலை, குன்றுதோறாடல்.

௧௧௨. பாதகமுஞ் செய்வினையும் பம்பும் பசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்—தீதகலா

௧௧௩. வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை எதிர்ந்தாலும்—அவ்விடத்திற்

௧௧௪. பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்சம் அகற்றும் அயில்வேலும்—கச்சைத்

௧௧௫. திருவரையும் சீறடியும் செங்கையும் ஈரா று
அருள்விழியும் மாமுகங்கள் ஆறும்—விரிகிரணஞ்

௧௧௬. சிந்தப் புனைந்த திருமுடிகள் ஓராறும்
எந்தத் திசையும் எதிர்தோன்ற—வந்திடுக்கண்

௧௧௭. எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமுந் தந்துபுகுந்து
உல்லாச மாக உளத்திருந்து—பல்விதமா

௧௧௮. ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்—ஓசை

௧௧௯. எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்(து)—ஒழுக்கமுடன்

௧௨௦. இம்மைப் பிறப்பில்இருவா தனையகற்றி
மும்மைப்பெருமலங்கள்மோசித்துத்-தம்மைவிடுத்(து)

௧௨௧. ஆயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்—சேய

௧௨௨. கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்(டு)
அடியேற்கு முன்னின் றருள்.

திருச்செந்தூர்க்

**கந்தர்கலிவெண்பா**

முற்றிற்று.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அறிவிப்பு.

ஈஸ்பர அன்பு நிறைந்த உத்தம புண்ணியவான்கள் ஒவ்வொருவரும் மிக்கக்கருணைகூர்ந்து ஔவையார் அருளிச்செய்த விநாயகரகவல்: குமர குருபரசுவாமிகள் அருளிச்செய்த திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா இவ்விரண்டையும் தினந்தோறும் பிராதகாலத்திலாவது அல்லது சாயங்காலத்திலாவது பாராயணஞ்செய்து வந்தால் விஷசுரங்களும் பிணி முதலானதும் அணுகாது சுகத்தோடிருப்பதுடன் இகத்துக்கும், பரத்துக்கும், சகலநன்மைகளும் ஈஸ்பர கடாக்ஷமும் உண்டாகும் இதன்கிரையம் அணு ஒன்றும் உடனே கிடைக்கும்படி செய்தால் மேன்மேலும் பலபுஸ்தகங்கள் துண்டுபேத்திரிகைகள் அச்சிடுகிறதற்கு ஊக்கமுண்டாகும் ஔவையார் அருளிச்செய்த அறஞ்செய விரும்பு யென்ற பாசுரமெய்ப் பொருளை மறக்க மாட்டீர்களென்று மனப்பூர்ணமாக நம்புகிறோம்.

பொதுநன்மை பிரியன்

ஸ்ரீ. செந்தன் தியானசபையார்

கீளவூர்

நாட்டுக்கோட்டை செட்டி தெரு தூத்துக்குடி.

14 MAR 1924